**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம்.சி.ஓ.பி.எண்.292/2016 நாள்.30.03.2021**

2021-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் மனுதாரர் தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வாஜித் பாஷா | தொழில் | கூலி |
| த.பெ/க.பெ. | மொக்தார் கொகன் | சாதி | |
| கிராமம் | பள்ளிம்பட்டு | மதம் | இந்து |
| வட்டம் | செஞ்சி | வயது | 34 |

**ம.சா.1**
**குறுக்கு விசாரணை**

நான் பள்ளிம்பட்டு கிராமத்தை சேர்ந்தவர். விபத்து நடந்த சமயத்தில் எனக்கு 31 வயது. 16.06.2016ம் தேதியில் மாலை 05.00 மணியளவில் நாகராஜன் பட்டியில் திருப்பத்தூரிலிருந்து திருவண்ணாமலையை நோக்கி செல்லக்கூடிய சாலையில் விபத்து நடந்தது. என் வியாபாரம் விஷயமாக சென்றேன். இருசக்கர வாகனத்தில் என் ஊரிலிருந்து திருப்பத்தூர் சென்றேன். பஜாஜ் பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் திருப்பத்தூரிலிருந்து திரும்ப வரும்போது இந்த விபத்து நடந்தது, அந்த வாகனம் எனக்கு சொந்தமான வாகனம். இருசக்கர வாகனத்தை நான் ஓட்டி வந்தேன். ஷமீம் உட்கார்ந்து வந்தார். சாலை ஒரே நேரத்தில் இரண்டு பேருந்துகள் செல்லக்கூடிய அளவிற்கு விசாலமான சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எனக்கு எதிரே வேறு எந்த வாகனங்களும் வரவில்லை. எனக்கு முன்னால் சென்ற ஆட்டோ சைகை செய்யாமல் திடிரென வலது புறம் திரும்பியதால் என் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 10 மீட்டர் இடைவெளி விட்டு சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால்,

சரியல்ல. அவர் திடிரென திரும்பியதால் என்னால் இருசக்கர வாகனத்தை நிறுத்த முடியவில்லை. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும் காரணம் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் நான் ஹெல்மெட் அணிந்து செல்லவில்லை. விபத்தில் எனக்கு தலையில்தான் அடிப்பட்டது. அங்கேயே மயக்கமாகி விட்டேன். என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. 8 நாட்கள் கழித்து எனக்கு சுயநினைவு வந்தது. சுயநினைவு வந்தபோது நான் வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் இருந்தேன். முதலில் திருப்பத்துார் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து பின் வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். இந்த விபத்தை என் மனைவி நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக என் மனைவி போலிசில் 3 நாட்களுக்கு பிறகு புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் மனைவிக்கு விபத்து பற்றி என்னுடன் பயணம் செய்த ஷமீம் கூறியுள்ளார். சிகிச்சைக்கு பிறகு நான் குணமாகி பழைய மாதிரி என் வேலைகளை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, மருந்து மாத்திரைகள் தொடர்ந்து எடுத்து வருகிறேன். பழைய மாதிரி வேலை செய்ய முடியவில்லை. சி.எம்.சி.யில் 8 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து வந்தேன். அதன்பிறகு வேறு எங்கும் சிகிச்சை எடுத்து கொள்ளவில்லை. டிஎன் 23 பிஎக்ஸ் 4461 என்ற எண் கொண்ட ஆட்டோதான் இடித்து விபத்து ஏற்படுத்தி விட்டது. ஆட்டோ ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா? பர்மிட் உள்ளதா? என்ற விவரம் எனக்கு தெரியாது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் ரூ.10,00,000/- நஷ்டயீடு கோரியுள்ளேன். 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபணையை நான் தெரிந்து கொள்ளவில்லை. இரண்டு வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டதால் என் இருசக்கர வாகனத்தையும் காப்பீட்டு நிறுவனத்தையும் தரப்பினராக சேர்க்காததால் என் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் கவனக்குறைவும் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன

விதிப்படி நான் தலைகவசம் அணியாததால் விபத்து ஏற்பட்டது எனவே, இழப்பீடு வழங்கும் போது என் கவனக்குறைவையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல, என் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் ரூ.35,000ரூபாய்க்குதான் கொடுத்தேன் என்றால் சரிதான். ரூ.2,00,000/- மருத்துவ செலவுகள் செய்ததற்கான பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.